உலக மகளிர்தினத்தை முன்னிட்டு

# வுமன் சமூக சேவை நிறுவனம்-கனராவங்கியும் இணைந்து ரூ.1.25 கோடி கடன் வழங்கியது

## கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் பங்கேற்பு



திருச்சி. மார்ச்.9

உலக மகளிர் தினத்தையொட்டி கனரா வங்கியும், வுமன் சமூக சேவை நிறுவனமும் இணைந்து மகளிர் தினத்தை ஸ்ரீரங்கம் ரெங்கபவன் திருமண மண்டபத்தில் நடத்தியது.

இந்த நிகழ்ச்சிக்கு வுமன் சுய உதவிக்குழுவை சேர்ந்த கண்ணகி சந்திரசேகரன் வரவேற்புரையாற்றினார். கனரா வங்கி துணை பொது மேலாளர் சம்பத் குமார் முன்னிலை வகித்தார். திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி 50 சுய உதவிக்குழுவினருக்கு 1.25 கோடி ரூபாயை கனரா வங்கி கடன் உதவி வழங்கியது. கனரா வங்கியின் திருச்சி புத்தூர் கிளை முதன்மை மேலாளர் டாக்டர் மஞ்சுநாதா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

முடிவில் புத்தூர் கிளை மேலாளர் ராணிசாய் ரமேஷ் நன்றி கூறினார். இதில் ஏராளமான சுய உதவிக்குழுக்களை சேர்ந்த பெண்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சுய உதவிகுழுவினர் தாங்கள் தயாரித்து விற்கப்படும் நாப்கின், சோப்பு வகைகள், மற்றும் மண்பாண்ட பொருட்கள், திண் பண்டங்கள் ஆகியவற்றை காட்சி பொருளாக பல்வேறு ஸ்டால்களில் வைத்திருந்தனர். இதனை விழாவில் பங்கேற்ற பலர் இந்த பொருட்கள் வாங்கி சென்றனர்.

தினபூமியில்
விளம்பம் செய்து
பயன்பெறுங்கள்